**செ.வெ.எண்: 153 நாள்: 08.03.2021**

**தபால் வாக்கு அளிப்பதற்கு 1450 நபர்கள் வாக்களிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

தஞ்சாவூர் கீழவாசல் பகுதியில் மாதிரி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பொதுமக்களுக்கு வாக்குப்பதிவு செயல்முறை விளக்க பயிற்சியினையும் , 80 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்கு செலுத்துவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களுக்கு அஞ்சல் வாக்கு செலுத்துவது தொடர்பாக அவர்களின் விருப்பங்களை இன்று (08.03.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு கேட்டறிந்தார்.

**80 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடம் அஞ்சல் வாக்கு செலுத்துவது குறித்து விருப்பங்களை கேட்டறிந்து பின், செய்தியாளரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம கோவிந்த ராவ் இ.ஆ.ப., தெரிவித்ததாவது,**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 2021 சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னிட்டு 100 சதவிகிதம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், அடையாள அட்டை வைத்துள்ள தபால் வாக்கு அளிப்பதற்கான விருப்பமுள்ளவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக வாக்களிப்பதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்களிக்க விருப்பமுள்ள 80 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்கள், மாற்றுத்திறனாளிகள் இவர்களுக்கு விருப்பம் இருக்கும் பட்சத்தில் படிவம் 20 பெற்றுக்கொண்டு, தபால் வாக்கு மூலமாக வாக்களிக்கலாம். விருப்பம் இல்லையேன்றாள் வாக்காளர் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளில் தனது வாக்குகளை செலுத்தலாம்,இதில் கட்டாயம் கிடையாது. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி விருப்பமுள்ள வாக்காளர்கள் இதனை பயன்படுத்தி கொள்ளலாம். அதேபோல் 80 வயதிற்கு மேற்பட்டவர், மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர் மூலம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே நமது மாவட்டத்தில் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் 45,337 நபர்கள் உள்ளார்கள், மாற்றுத்திறனாளிகள் 13,946 நபர்கள் உள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் தபால் வாக்கு அளிக்க விருப்பமுள்ளவர்கள் தெரிவிக்கும் பச்சத்தில் அவர்களுக்கு படிவம் டி என்ற படிவம் வழங்கப்படுகிறது இதனை பூர்த்தி செய்தும், படிவம் 12 என்ற படிவத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள்யிடம் அளிக்கவும். அதன்பின்னர் இவர் தபால் வாக்கு அளிப்பதற்கு தகுதியுடையவர் என்பது உறுதியாகும். மேலும் தபால் வாக்கு அளிக்கும் முதியோர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு இது சம்பந்தமான தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து நமது மாவட்டத்தில் இதுவரை 1450 நபர்கள் தபால் வாக்கு அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள். மேலும் தபால் வாக்கு அளிக்க தேவைப்படும் நபர்களுக்கு படிவம் வழங்கப்பட்டு வருகிறது, தபால் ஓட்டு அளிக்க விருப்பமுள்ளவர்கள், அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் செய்து தரப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தேர்தல் நடத்தும் அலுவலர்/ தஞ்சாவூர் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவிந்திரன், தஞ்சாவூர் தாசில்தார் திரு. பாலசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.